# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண் 34/2020

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | பாப்பு | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | கிருஷ்ணன் | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 65 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | காளிகவுண்டம்பாளையம் | நாள் | .. | 13.07.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13-ஆம் நாள் புதன்கிழமை திருமதி. பாப்பு க/பெ. கிருஷ்ணன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை.

நான் இந்த வழக்கில் 2 ம் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தில் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 02.02.1980 தேதியிட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 15.10.2018 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் இணைய வழி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 15.11.2014 தேதியிட்ட மாராயி என்பவருடைய இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 14.05.2014 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 16.07.2020 தேதியிட்ட காளிகவுண்டம்பாளையம் கிராம பட்டா எண் 1607 க்கான இணைய வழி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 18.03.2019 தேதியிட்ட கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் / பாப்பு

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.